நாகொட பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாகொட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவு சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நாகொட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண சிட்டையிடல் ரூபா 535,000 தொகை எனினும், அதனை ரூபா 7.8 மில்லியன் தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 7.27 மில்லியன் தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	அட்டுறு அடிப்படையில் ஆண்டிற்குரிய வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

(ஆ)	முத்திரைக் கட்டணம் ரூபா 7.52 மில்லியன் தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் அந்த எண்ணிக்கையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	அட்டுறு அடிப்படையில் ஆண்டிற்குரிய வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	உடுகம உப அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடம் மற்றும் நூலகம் நிர்மாணித்தல் தொடர்பாக ரூபா 226,006 தொகைக்கான தடுத்து வைத்தல் பணம் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	தடுத்து வைத்தல் பணம் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	தகன கூடத்தின் நுழைபாதை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களத்தினால் சபைக்கு மிகையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 617,736 இற்கான தொகை கடன் கொடுத்தோர் மீதியின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	கடன் கொடுத்தோர் மீதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(உ)	திருத்த வேலை அலுவல் ஒன்றிற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 99,065 தொகை காசுக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைத்திருந்தமையால் கடன் கொடுத்தோர் மீதி அந்த எண்ணிக்கையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	செலவுகளின் தன்மையை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஊ)	சபையின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் திருத்த வேலைக்குரிய பில்பத்திரத்தின் பெறுமதி முழுவதும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 54,300 இற்கான தொகையொன்று செலுத்த வேண்டிக் காணப்பட்டது.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(எ)	கடந்த ஆண்டுகளின் போது நூலக அங்கத்தவர்களிடமிருந்து பெற்றிருந்த ரூபா 212,500 தொகைக்கான திருப்பிச் செலுத்தப்படாத வைப்புக்கள் வருமானம் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் திரண்ட நிதியம் அந்த எண்ணிக்கையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

(ஏ)	சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 3.99 மில்லியனிற்கான சோலா முறைமையின் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் போது சோலா முறைமை மூலம் உழைக்கப்பட்ட வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	சரியாக நிலையான சொத்துக்கள் மூலதனப்படுத்தப்பட வேண்டியதுடன், வருடாந்தம் அந்தச் சொத்துக்களின் மூலம் உழைக்கக்கூடிய வருமானத்தை கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஐ)	கட்டிடங்கள் நவீனமயப்படுத்தல் மற்றும் நிர்மாண அலுவல்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 16.9 மில்லியன் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 96,800 இற்கான பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	சரியான நிலையான சொத்துக்கள் மூலதனப்படுத்தப்பட வேண்டும்.
(ஒ)	மீளாய்வாண்டின் சம்பள மீளளிப்புக்காக உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து மிகையாக கிடைத்திருந்த ரூபா 65,468 தொகை செலுத்த வேண்டிய மீதியென காட்டப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 12 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப்பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 3.4 மில்லியன் தொகைக்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்யப்பட வேண்டும்.

1.6.3 தொங்கல் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2014 ஆண்டு முதல் காணப்படுகின்ற தொங்கல் கணக்கொன்றின் ரூபா 18,315 இற்கான செலவு மீதியொன்று மீளாய்வாண்டின் போது தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	தொடர்ச்சியாக காணப்படும் தொங்கல் கணக்கு மீதியை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 12,276.31 மில்லியன் தொகைக்கான 06 கணக்கு விடயங்களின் மீதிகளை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை.	எதிர் காலத்தில் சரி செய்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	மீதிகளை மெய்மையாய்வதற்காக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு		இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் நிதிப் பிரமாணக் கோவை				
(அ)	நிதிப் பிரமாணம் 104	2023 ஆண்டு டிரக்டர் வண்டியொன்றிக்கு ஏற்பட்டிருந்த சேதம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	விசாரனை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிதிப் பிரமாணம் 571	02 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 2.89 மில்லியனிற்காக 68 வைப்புக்களை தீர்ப்பதற்கு	எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5.58 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1.10 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	1,385,000	768,815	1,026,221	121,815	1,315,000	561,850	582,269	379,221
வாடகை	7,478,120	4,266,436	3,953,243	1,038,580	3,379,200	2,967,456	2,859,710	725,387
அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,375,500	306,416	117,866	292,073	1,100,500	1,086,328	982,805	103,523
ஏனைய வருமானங்கள்	6,131,100	46,976,531	50,494,665	11,282,995	1,705,000	830,496	830,496	14,801,129
	16,369,720	52,318,198	55,591,995	12,735,463	7,499,700	5,446,130	5,255,280	16,009,260

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரியும் வரியும்		
2023 ஆண்டின் போது 06 கிராம சேவகர் பிரிவுகள் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என குறிப்பிடப்பட்ட போதிலும், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது அறிக்கைகள் சேகரிக்கப்பட்டு வருகின்றது என.	வீதவரி விதிக்க வேண்டிய பிரதேசங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ) வாடகை		
சபையின் 15 கடையறைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 570,280 இற்கான வாடகை 1987 இன் பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், சபையினால் அவ்வாறு செய்திருக்கவில்லை.	நினைவூட்டல் கடிதம் மூலம் மற்றும் தொலைபேசி அழைப்பின் மூலம் நிலுவை மீதியை செலுத்தும் படி அறிவுரை வழங்கப்பட்டது என.	நிலுவைத் தொகையை தாமதம் இன்றி அறவீடு செய்யக்கூடிய பொருத்தமான வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட்டு நிலுவை மீதிகள் அறவீடு செய்யப்பட வேண்டும்.
(இ) வியாபார வரி		
மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 79 அலகுகளில் இருந்து ரூபா 89,400 தொகைக்கான வியாபார வரி நிலுவையாக காணப்பட்டது.	நிலுவைத் தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நிலுவைத் தொகையை தாமதம் இன்றி அறவீடு செய்யக்கூடிய பொருத்தமான வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட்டு நிலுவை மீதிகளை அறவீடு செய்யப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) சபைக்குச் சொந்தமான அலுத்வத்த வாராந்த சந்தையை டெண்டர் பண்ணும் போது அந்த வாராந்த சந்தை மூலம் ஒரு வாரத்திற்கு ரூபா 6,000 தொகையொன்று அறவீடு செய்து வருடத்திற்கு ரூபா 288,000 தொகை வருமானம் ஒன்று உழைக்கக்கூடியதாக இருந்த போதிலும், சபையின் வருமானப் பரிசோதகரினால் ஒரு வாரத்தில் ரூபா 3,000 தொகை என குறைந்த கூறுவிலை தீர்மானிக்கப்பட்டிருந்தமையால்,	அடுத்த ஆண்டில் டெண்டர் மூலம் சந்தையை குத்தகைக்கு கொடுக்கப்படும் என.	வருமானம் சரியாக எதிர்வு கூறப்பட வேண்டும்.

	அதன் வருடாந்த வருமானம் ரூபா 144,000 தொகையினால் குறைந்திருந்தது.		
(ஆ)	2009 ஏப்ரல் 16 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 09/2009 இன் படி மேலதிக நேர கொடுப்பனவின் போது விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்திக்கொள்ளாமல் சபையின் உத்தியோகத்தர் 37 பேருக்கு ரூபா 114,470 தொகை மேலதிக நேர கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை அடையாளப்படுத்தும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என.	விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உள் வருதல் மற்றும் வெளிச் செல்லும் நேரங்களை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டு செலவுகளை உறுதிப்படுத்தும் மற்றும் கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 41 நிறுவனங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்காததுடன், அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 184,500 தொகை மற்றும் பரிசோதனைக் கட்டணமாக ரூபா 123,000 தொகையினை சபை இழந்துள்ளது.	எதிர் காலத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய கைத்தொழிற்சாலைகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	உரிய முறையில் அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டி நிறுவனங்களை இனங்கண்டு வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பாதைப் பதிவேட்டை பதிவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 266,270 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும், 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நில அளவை அலுவல்கள் பூர்த்தி	உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி பாதைப் பதிவேட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	குறிப்பிட்ட காலப் பகுதியில் பாதைப் பதிவேட்டு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

	செய்யப்படாமையால், பாதைப் பதிவேடு தயாரிக்கும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.		

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட ரூபா 3.037 தொகை பெறுமதியான 02 வாகனங்கள் விளைவற்று உடுகம உப அலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.	திருத்த வேலை அலுவல்கள் தேவைப்பாடு மற்றும் முக்கியத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது என.	சொத்துக்கள் விளைவற்று வைத்திருக்காமல் விரைவாக திருத்த வேலைகள் மேற்கொண்டு எதிர் பார்த்த கருமங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	சபையினால் வீதி விளக்கு திருத்த வேலைகளுக்காக கொள்வனவு செய்திருந்த 06 மின்சார இருப்புக்களின் 46 அலகுகள் 2020 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது.	பயன்படுத்த முடியாத விடயங்கள் பண்டக் கணிப்பீட்டிற்கு சமர்ப்பிக்கப்படும் என.	தேவைப்பாட்டினை சரியாக எதிர்வு கூறி கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், தேவையற்ற இருப்புக்களை கொள்வனவு செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.